

தாயுமானவர் தரும்
இடம், பொருள், ஏவல்.
மன்னார்குடி பானுகுமார்
ராஜம் பதிப்பகம்
இணையதளத்தில் banukumar.in

---

# தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்

தாயுமானவர் நம்மை எச்சரிக்கை செய்கிறார்? என்ன எச்சரிக்கை.

சாதகனே நீ எங்கே செல்கிறாய்?

திறந்த வீட்டிற்குள் நுழையும் அறியாமை மிகுந்த நாய்போல் மனதை அலையவிடாதே! இடம், பொருள், ஏவலை நீ சம்பாதிக்க வேண்டும்.

ஆனால் நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்? எனக்கு வீடு வாசல் வேண்டும், மண், பொன், பெண், பணம், வேலைக்காரர்கள் வேண்டும் என்றல்லவா எண்ணிக்கொண்டு, அங்கேயும் இங்கேயும் அலைந்து கொண்டிருக்கிறாய்?

உன்னுடைய இந்த செயல் எப்படி இருக்கிறது தெரியமா?

ஒரு நாய் ஒரு மடத்திற்குள் அனுமதி கேட்டுக் கொண்டா உள்ளே நுழையும்?

புத்தி உள்ளவன், பண்பாடு தெரிந்தவன், சாதனையில் உயர்ந்து வரும் ஒருவன், ஒரு புதிய இடத்திற்கு போனால், அந்த இடத்திற்குரியவர்களிடம் அனுமதியோடுதான் உள்ளே நுழைவான்.

"அனுமதியின்றி உள்ளே வராதே

அனுமதி பெற்று உள்ளே வரவும்"

என்றெல்லாம் போர்டில் எழுதி வைத்திருப்பதை நாம் பாத்திருக்கிறோம் அல்லவா?

---

ஆனால், ஆசை வயப்பட்டால் இந்த மனம், நாய்போல எங்கே வேண்டுமானலும் நுழைந்து விடுகிறது. அதைச் சொல்கிறார் தாயுமானவர்.

இடம் பொருள் ஏவலைக் குறித்து, மடம் புகு நாய் என்கிறார். மடம் என்பது சந்நியாசிகள் வாழக் கூடிய இடம்.

அங்கே சில சமயங்களில் அன்னதானம் நடக்கும். சத்சங்கம் நடக்கும். மக்கள் வந்து போகக் கூடிய இடமாக அது இருக்கும்.

அப்படி ஓர் இடத்தில், நாய் ஒன்று தன்னிஷ்டம் போல் நுழைந்து விடுகிறது. அதுபோல ஆசை வயப்பட்ட மனது எங்கெங்கோ நுழைந்து வடுகிறதாம். மடம் புகு நாய் என இங்கே நீ அகப்பட்டாய் என்கிறார் தாயுமானவர்.

இப்போது குருவின் நிலையில் இருந்து நம்மிடம் பேசுகிறார். “இங்கே நீ வாடா என்கிறார். என் அருகில் வந்து உட்கார்” என்கிறார். நான் சொல்வைதைக் கேள் என்று உபதேசம் செய்கிறார். என்ன உபதேசம்?

இடம் பெறு பாழ் நெஞ்சாலே அஞ்சாதே. இந்த உலக வாழ்க்கை எப்படி இருக்கிறது? பேராசையால் மானுடம் உழன்று கொண்டிருக்கிறது.

எனக்கு, இடம்,பொருள், ஏவல் வேண்டும் என்னும் ஆசை வந்து விட்டால், அதை நினைத்த உடனே சாதித்து விட முடியாது.

பயிற்சி செய்ய வேண்டும். முயற்சி செய்ய வேண்டும். உழைக்க வேண்டும். காத்திருக்க வேண்டும்.

---

அப்படி காத்திருந்து காலத்திலே, சாதகனுக்கு பயம் வந்து விடுகிறது. நமக்கு கிடைக்குமோ கிடைக்காதோ என்ற கவலை வந்து விடுகிறது.

கிடைக்காகாமல் போய்விடுமோ! நான் நினைப்பது நடக்குமோ நடக்காதோ என்று மனம் நிம்மதியிழந்து அச்சத்தால் தவிக்கும்.

அதற்கு என்ன காரணம்? அந்த ஆசைதான். அத்தகைய மனதைத் தாயுமானவர் எப்படி வர்ணிக்கிறார் பாருங்கள்.

“மடம் பெறு பாழ் நெஞ்சாலே” மட் என்றால் இந்த இடத்தில் அறியாமை. அறியாமையால் கெட்டுப் போயிருக்கின்ற மனதின் விளைவாக, நீ ஆசைக்கு அடிமையாகி, அதன் விளைவாகக் கஷ்டப்பட்டு, பயந்து பயந்து துன்பப்படுகிறாய். அந்த பயம் வேண்டாம் என்கிறார்.

இப்போது சாதகன் கேட்கிறான். “சரி பயப்பட வேண்டாம். பின் எதைச் செய்ய வேண்டும்?

விடையாக வருகிறார் தாயுமானவர். உன்னுடைய பிராரப்த வசமாக உனக்கு எப்படிப்பட்ட இருக்குமிடம், அனுபவிக்கக் கூடிய பொருள்கள், உறவினர்கள், ஏவல் செய்யும் ஆட்கள் போன்றவை அமைந்திருக்கின்றனவோ அவற்றை அப்படியே ஏற்றுக் கொள்.

ஆனால் உனக்கு உண்மை இடம் எது தெரியுமா?

“நிராசை மன் இடமே இடம்.”

வீடு கட்ட வேண்டும்? நிலம் வாங்க வேண்டும், என்றெல்லாம் நினைக்கிறாயல்லவா? உனக்குரிய உண்மையான இடம் எது தெரியுமா?

---

உன் அமைதியைக் கெடுக்கும் அந்த ஆசை என்னும் பேய் பிடித்த மனம் அல்ல. அந்த ஆசையற்ற, தூய, வைராக்கியம் மிகுந்த மனதுதான் அந்த இடம்.

ஒருவன் மனதில் ஆசையே இல்லை என்றால் அவன் அனுபவிப்பதற்கான பொருட்கள் வராமல் போய்விடுமே. ஆசைப்பட்டால் தானே வரும். இதுதாதன் தற்கால சமுதாயத்தின் மனப்பான்மை. உன்னுடைய கேள்வியும் அதுதான்!

இந்த மனப்பான்மையை சாதகர்கள் விட்டுவிட வேண்டும். "எனக்குப் பொருள் கிடைக்க வேண்டும். அதை நான் அனுபவிக்க வேண்டும்" என்னும் ஆசைதான், மேலும் மேலும் பிறவியில் நம்மைச் செலுத்துகின்றது.

ஞானிகள் என்ன சொல்கிறார்கள்? நீ கேட்காவிட்டாலும் என்னென்ன நீ அனுபவிக்க வேண்டும் என்று விதித்திருக்கிறதோ அவை அனைத்தும் உன்னிடத்தே உரிய காலத்தில் வந்தே தீரும்.

நீ கேட்கவில்லை என்றாலும் உன்னைத் தேடி வரும். எதை நீ அனுபவிப்பதற்கு இல்லையே அது நீ கேட்டாலும் உனக்குக் கிடைக்கப் போவது இல்லை.

அதனால் இந்தப் பொருள் போன்ற விஷயங்களுக்காக நீ அலையாதே. அப்படி நீ ஆசையில்லாது இருந்தால் என்ன வரும்?

அந்த மாநிலத்தே பொருளும் கிடைக்கும், இடமும் கிடைக்கும், ஏவலாளர்களும் கிடைப்பார்கள்.

மாநிலம் என்ற பதம் - ஆசையற்ற, நிராசையில் நிலைபெற்ற, சுத்த மனது என்னும் மாநிலம். அதுதான் பெரிய இடம். அந்த பெரிய

---

இடத்தில் நீ வசித்தால் உனக்கு வேண்டிய பொருள் எல்லாம் வந்து சேரும்.




வேதாத்திரி மகரிசி "வேண்டாமை வேண்டும்" என்பார். செய்து வந்த தொழிலில் பெரிய நஷ்டம். இருந்த ஒரு குடிசையும் ஊர்க்காரர்கள் பிய்த்தெறிந்து, ஊரை விட்டே விரட்டினர். தனது சொத்துக்கள் எல்லாம் போய்விட்டன. அதைப் போல் அவரிடம் இருந்த ஆசையும் போய் விட்டன.

ஆனால், அவரால் உருவாக்கப்பட்ட எத்தனை அறிவுத்திருக்கோயில்கள், மனவலைக்கலை மன்றங்கள், அறக்கட்டளைகள் இன்று உலகெங்கும் சேவை செய்து வருகின்றன. ஆன்மீகக் கல்வியைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன.

பல பல்கலைக் கழகங்களில் ஆன்மீகக் கல்வி, ஒழுக்கக் கல்வி இன்று போதிக்கப்பட்டு வருகின்றனவே! இவையெல்லாம் எப்படி வந்தன?



அவருடைய மனது ஆசையற்றதாக இருந்ததால், வேண்டாமை என்னும் விழுச் செல்வம் அவருடன்

---

இருந்ததால் மற்ற செல்வங்கள் அவரைத் தேடி வந்தன.

"அவர் துறவி. நாங்கள்?" என்று நீங்கள் கேட்கலாம். அவர் இல்லறத் துறவியாகத்தானே வாழ்ந்தார்.

இங்கு ஒரு விஷயத்தை நாம் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஞானம் - துறவு இவற்றிற்கு இடையே என்ன தொடர்பு?

துறவு என்பது வாழ்க்கை முறை, வீட்டைத் துறந்து, உற்றார் என்று குடும்பத்தில் உள்ளவர்களை மட்டும் நினைக்காமல், "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற எண்ணத்தில், "உலகமே எனக்குச் சொந்தம்" என்று உணர்ந்து, "தேவையென்றால் நான் அனைவருடனும் இணங்கி இருப்பேன். இல்லையேல் தனியாக இறையுணர்வில் ஆழந்து மூழ்கியிருப்பேன், திளைத்திருப்பேன்" என்று உணர்ந்து, அவன் (இறைவெளியை) நினைத்துக் கிளம்பி வந்து விட்டான். இது துறவு வாழக்கை முறை.

இந்த வாழ்ககை முறை வாழ்ந்து அவன் ஞானத்தைப் பெற முயலுகின்றான். விரும்பினால் இல்லறத்தில் இருந்து கொண்டும் அந்த ஞானத்தைப் பெறலாம். அதுதான்இங்கு சூட்சுமம். அப்படியானால், இல்லறத்தானுக்கும் ஞானம் சித்திக்கும். "எங்களுக்கெல்லாம் ஞானம் கிடைக்கமா கிடைக்காதா?" என்று பயப்பட வேண்டாம்.

ஆனால் ஒரு நிபந்தனை. என்ன நிபந்தனை. நிராசை வேண்டும். ஆசையை விட வேண்டும்.

குடும்பதில். இருந்தாலும் ஆசையை வளர்த்து கொள்ளாமல், "இறைவன் நமக்கு அளித்ததது கிடைக்கும். நம் வினைக்கேற்ப நமக்கு நலம் செய்வதை அவன் கொடுப்பான்?

---

நம்பிக்கையோடு, கிடைத்ததைக் கொண்டு திருப்தி அடைந்து, மகிழ்ச்சியாக இருந்தால், அந்த நிராசை நிறைந்த இடமே அவனுக்கு நிலையான இடம். அங்கே எல்லா பொருட்களும் வரும் என்கிறார் தாயுமானவர்.

சொர்க்கம் என்று இறந்த பின்னர் போகவேண்டாம். இங்கேயே. இப்போதே சொர்க்கமாக இருக்கும் வாழ்க்கை என்று நினைக்கும் படியாக இந்த வசதிகள் இருக்கிறன.

ஆனால் உன் மனதில் இந்த ஆசைகள் இல்லை என்றால் வாழக்கையில் எது கிடைக்கிறதோ அதைக் கொண்டு அவர்களைவிட ஆனந்தமாக நீ இருக்கலாம்.

இடம், பொருள், ஏவலை வைத்துக் கொண்டு கவலையோடு உறக்கம் பிடிக்காமல் இருப்பவர்கள் இன்று ஏராளம்.

வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவதுதான் நாகரிகம் என்று நினைக்கின்ற, தற்கால லோகாயதமான மனப்பான்மையை தாயுமானவர் அடித்துத் துரத்துகின்றார். விரட்டுகின்றார்.

அந்த மானிலத்ததே பொருளும், தாயுமானவர் கருத்துப்படி --மேலும் உன் மனது எப்படி இருக்க வேண்டும்? திடம்பெறவே நிற்கின் எல்லா உலகமும் வந்து ஏவல் செய்யும்.

உன் மனத்திற்கு உறுதி ஏற்பட்டுவிட்டால், நீ ஆசைப் படாதிருந்தால், யார் பின்னாலேயும் அலையாதிருந்தால், எதிர்பார்ப்பற்ற நிலையில் இருந்தால், உலகம் உன் பின்னால் வரும் என்கிறார் தாயுமானவர்.

---

இந்த நிலை நின்றோர் - சரி , இப்படியெல்லாம் மனிதர்கள் இருந்திருக்கிறார்களா? நீங்கள் கதை கட்டுகிறீர்களா என்று நீங்கள் கேட்பது புரிகிறது. இதற்கு தாயுமானவர் விடை தருகிறார்.

சனகன் முதல் முனிவர்கள் இருந்திருக்கிறார்கள். தாயுமானவர் அடிக்கடி சனகன் முதல் முனிவர்களைக் குறிப்பிடுவார்.

இங்கே சனகன் என்பது சீதாப்பிராட்டியின் தந்தையான ஜனகரை அல்ல. தட்சிணாமூர்த்தியின் திருவடியில் நான்கு முனிவர்கள் பாடம் கேட்கிறார்கள்.




ஜனகர். சனந்தனர், சனாதனர், சனத்குமாரர். இந்த நான்கு முனிவர்கள் போன்ற பக்குவம் பெற்றவர்களள எல்லோரும் ஆசையின்றி இருந்தபோதும், தேவையானவை கிடைக்கப் பெற்றனர். அவர்கள் அதை நாடி ஒடவில்லை. அது அவர்களை நாடி வந்தது என்றும் தாயுமானவர் சொல்லுகிறார். இந்தநிலை நின்றோர் சனகன் முதல் முனிவர்.

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(நினைவு ஒன்று 4 - தா.பா.188.)

---

இடம்பொருள்ஏ வலைக்குறித்து மடம்புகுநாய் எனவே
எங்கேநீ அகப்பட்டாய். இங்கேநீ வாடா.
மடம்பெறுபாழ் நெஞ்சாலே அஞ்சாதே. நிராசை
மன் இடமே இடம்அந்த மாநிலத்தே பொருளும்.
திடம்பெறவே நிற்கின் எல்லா உலகமும் வந்து ஏவல்
செய்யும் இந்த நிலைநின்றோர் சனகன் முதல் முனிவர்
கடம்பெறுமா மதயானை என்னவும் நீ பாசக்
கட்டான நிகளபந்தக் கட்டு அவிழப் பாரே.

மூன்றாம் வகுப்பு பெட்டியில் நரேந்திரர்(விவேகானந்தர்) பயணம் செய்து கொண்டிருந்தார். கடுமையான கோடைக்காலம். தாகம் நாக்கை வறட்டியது.

ரயில் நிலையங்கில் காசு கொடுத்தால்தான் தண்ணீர் கிடைக்கும். நரேந்திரரிடம் காசு வைத்துக் கொள்ளும் வழக்கம இல்லை.

அவரருகில் உட்கார்ந்திருந்த ஒருவர் "சின்ன வயசு, திடகாத்திரமான உடல். உழைத்துப் பிழைக்காமல் சன்னியாச வேடம் போடுகிறாயே" என்று நரேந்திரரைக் குற்றம் சாட்டினார்.

நரேந்திரர் எதுவும் பேசவில்லை. ரயில் நிலையம் ஒன்று வந்ததும் சற்று இறங்கி இளைப்பாற நிழல் தேடினார். நிலைய ஊழியர்களோ அவரை உட்கார விடாமல் விரட்டினார்கள்.

கொளுத்தும் வெய்யிலில் நரேந்திரர் அமர்ந்திருந்தார். அப்போது ரயிலில் அவருடன் உட்கார்ந்திருந்தவர் "காசும் பணமும் எதற்கு என்று உபதேசம் செய்கிறீர்களே, இப்போது புரிந்ததா?" என்று ஏளனம் செய்தார். நரேந்திரர் இதற்கும் மௌனமாக இருந்தார்.

அப்போது அந்த ஊரில் வசிக்கும் ஒருவன் விரைந்தோடி வந்து நரேந்திரரை வணங்கினான். அவன் கையிலே பலகார

---

மூட்டையொன்றும், தண்ணீர் கூஜாவும் இருந்தன. அவனை, நரேந்திரர் "யாரப்பா" என்று அன்பொழுக வினவினார்.

அவனோ, தரையை சுத்தம் செய்தான். துண்டை விரித்தான். மூட்டையை அவிழ்த்து பூரிகளையும் மிட்டாய்களையும் இலையில் குவித்து, சாப்பிடுங்கள் என்று உபசரித்தான்.

பசி, தாகம் வாட்டிய போதிலும், உடனே அவர் உண்ணவில்லை. அவன் வேறு யாரையோ தவறுதலாக நினைத்து, தனக்கு உணவு அளிக்கிறானோ என்ற ஐயம் அவருக்கு எழுந்தது.

ஆனால் அவன் நிச்சயமாக இருந்தான்.

"நான் இந்த ஊரில் மிட்டாய் கடை வைத்திருக்கிறேன். பகலில் சற்று தூங்குவேன். இன்று தூங்கும்போது ஸ்ரீராமர் என் கனவில் தோன்றி உங்களை என் முன்னே காட்டி, "இவர் இரு தினங்களாகப் பட்டினியாக இருக்கிறார். அவருக்குப் பலகாரங்கள் செய்து கொடு" என்று கட்டளையிட்டார். ராமரின் கட்டளையை ஏற்றுச் சுடச்சுட பூரி மிட்டாய்களைச் செய்துகொண்டு வந்தேன்" என்று கூறி முடித்தான்.

நரேந்திரர் ஸ்ரீராமரின் அருள் பிரசாதமான அவற்றை உண்ணும்போது, ரயிலில் உடன் பயணம செய்தவர் சன்னியாசத்தின மேன்மையை உணர்ந்தவராக நரேந்திரரை மிண்டும் மீண்டும வணங்கினார்.

நிராசை வேண்டும். அப்படியானால் நாம் என்ன செய்ய வேண்டும்? சொல்கிறார் தாயுமானவர். கடம்பெறுமா மதயானை என்னவும்நீ பாசக் கட்டான நிகபந்தக் கட்டு அவிழப் பாரே.

---

மதம் பொருந்திய பெரிய யானையை கட்டுப்படுத்த ஒரு வலுவான இரும்புச் சங்கிலியைக் கொண்டு அதைக் கட்டி பிணைத்துப் போடுவார்கள்.

அந்த மதம் பிடித்த யானை அடங்காத திரிவது போல ஆசையால் பீடிக்கப்பட்ட உன் மனது அலைந்து திரிகின்றது. அந்த ஆசையை நீ கட்டாமல் விட்டால் அது உன்னைக் கட்டி போட்டுவிடும்.

அந்த ஆசை எப்படிப் பட்டது? நிகள பந்தம் என்கிறார். சங்கிலியால் உன்னைக் கட்டிப் போட்டதுபோல ஆசை உன்னைக் கட்டிப் போட்டு விடும்.

நீ அந்தக் கட்டை அவிழ்த்துப்பார். அருணகிரிநாதரும் அதைத்தான் சொல்கிறார். "ஆசாநிகளம் துகளாயினபின் பேசா அனுபூதி பிறந்ததுவே."

ஆசை என்பது சங்கிலி போல நம்மைக் கட்டி இழுக்கின்றது. அந்தக் கட்டு அற்று விழ வேண்டும். அப்போது நமக்கு நிம்மதி கிடைக்கும்.

சரி! நிராசையை எப்படி வளர்ப்பது. சரியான கேள்வி. ஆசையை சீரமைத்துக் கொள்ள வேண்டும். எப்படி?

ஒரு ஆசை தோன்றினால்

1. இந்த ஆசை நமக்கு தேவைதானா?
2. இந்த ஆசையை பூர்த்தி செய்ய வாய்ப்பு வசதி எனக்கு உண்டா?
3. பின்விளைவு என்ன?
4. உடல், மன, பொருளாதார வலிமை ஏற்றதாக உள்ளனவா?
5. முடிவு

---

என்ற கோணத்தில் ஒவ்வொரு ஆசையையும சீரமையுங்கள். நிராசை வந்துவிடும்.

வாழ்க்கையில் உனக்கு வேண்டிய இடம், பொருள், ஏவல் இறையருளால் அவ்வப்போது உன்னை வந்து சேரும். பேராசை உன்னை விடட்டுப் போகும்.

நீ எதற்கும் கவலைப்படாமல் ஆசையின்றி அந்த ஆண்டவனை, வெட்டவெளியை, அருள்வெளியை, இமைப்பொழுதும் உன் நெஞ்சில் நீங்காமல் நினைத்துக் கொண்டு, இல்லறத்தில் இருந்தாலும், நீ ஞானியாக ஆனந்தமாக வாழ்வாய் என்று சொல்கின்றார் தாயுமானவர். இதுவே தாயுமானவர் தரும் இடம்,பொருள், ஏவலாம்.

நன்றி.

**தர்மச் சக்கரம் மாத இதழ்கள்**

**விவேகானந்தரின் வாழ்க்கை வரலாறு.**